# EASTERN UNIVERSITY, SRI LANKA
## Faculty of Commerce and Management
## First & Second Semester Examination in Certificate in Business Administration (2004/2005/2006) Re-Repeat (June/July 2010)

LIBRARY
03 AUG 2010
Eastern University, Sri Lanka

CBA 1033 Principles of Managemen

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) a) "முகாமைத்துவம்" என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் தருக.
(03 புள்ளிகள்)

b) பிரதான முகாமைத்துவ செயற்பாடுகளை பட்டியலிட்டு நிறுவனங்களின் வெற்றிக்கு அச்செயற்பாடுகளின் பங்களிப்பினை சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

c) திட்டமிடல் படிமுறைகளை வரிசைப்படுத்தி சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

d) குறிக்கோள்களுக்கும் திட்டமிலுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2) a) "வினைத்திறன்" "விளைதிறன்" என்ற பதங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
(06 புள்ளிகள்)

b) வினைத்திறனுடைய முகாமையாளருக்கு காணப்பட வேண்டிய திறமைகளை குறிப்பிட்டு வேறுபட்ட அதிகார மட்டங்களில் அவற்றின் முக்கியத்துவத்தினை விளக்குக.
(06 புள்ளிகள்)

c) "நிறுவன சூழல்" என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி பொதுச்சூழல் காரணிகளை பட்டியலிட்டு விளக்குக.
(08 புள்ளிகள்)

d) நிறுவன வெற்றிக்கு நிறுவன சூழல் பற்றி முகாமையாளர் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குக.
(05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

3) a) தீர்மானம் எடுத்தல் தொடர்பான செய்முறையினை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

b) தொகுதியாகத் தீர்மானம் எடுத்தலில் காணப்படும் நன்மைகளை பட்டியலிடுக.
(05 புள்ளிகள்)

c) தீர்மானம் எடுத்தலில் காணப்படுகின்ற தடைகளை விளக்குக.
(05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

4) a) ஒழுங்கமைத்தல் என்ற பதத்திற்கு விளக்கம் கூறி அதன் நான்கு பிரதான செயற்பாடுகளை பட்டியலிடுக.

(07 புள்ளிகள்)

b) நிறுவனம் ஒன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தத்துவங்களை சுருக்கமான விளக்குக.

(07 புள்ளிகள்)

c) "திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முகாமைத்துவ செயற்பாடுகளாகும்" இக்கூற்றினை ஆராய்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5) a) ஊக்கப்படுத்தல் செயன்முறையினை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

b) மாஸ்லோவின் படிமுறை அமைப்பு தேவைக் கோட்பாட்டினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

c) நிறுவனத்தில் பல்வேறு தேவைகளுக்காக தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகின்றது அவற்றினை பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

d) சிறந்த தொடர்பாடலுக்கு தடையாகக் காணப்படுகின்ற காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)